சி.தி.து.ந.க.எண்.பி2/1759/2021

பெருநகர சென்னை மாநகராட்சி

சிறப்பு திட்டங்கள் துறை

# அறிவிப்பு

மன்றத் தீர்மான எண்.41/2022, நாள்.09.04.2022ன்படி ஒப்பந்ததாரர்களின் பதிவினை ஓராண்டுக்கு ஒருமுறை புதுப்பித்தல் என்பதிலிருந்து மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தல் (Financial Year) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் இவ்வருடம் 2022-2023ஆம் ஆண்டுக்கான ஒப்பந்ததாரர் பதிவினை 30.04.2022க்குள் கீழ்காணும் ஆவணங்களை சமர்ப்பித்து புதுப்பித்துக் கொள்ளலாம்.

1. ஒப்பந்ததாரர் பதிவு சான்றிதழின் நகல் (Registration Certificate)
2. முந்தைய ஆண்டு ஒப்பந்ததாரர் பதிவினை புதுப்பித்த நகல் (Renewal Copy)
3. வருமானவரி சான்றிதழ்
4. சரக்கு மற்றும் சேவை வரி (GST) சான்றிதழ் (Included Annual Report GSTR-9 / GSTR-9C)
5. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ள பணிகளின் விவரங்கள்
6. பணிகள் செய்த / செய்து கொண்டுள்ள பணிகளின் விவரங்கள்
7. செல்வ நிலைச் சான்றிதழ் மற்றும் அச்சொத்துக்களின் வில்லங்க சான்றிதழ்
8. வகுப்பு-1 முதல் வகுப்பு-5 வரை உள்ள ஒப்பந்ததாரர்களின் பதிவினை புதுப்பிக்கும் கட்டணமாக ரூ.15,000/- (மூன்று ஆண்டுகளுக்கு) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
9. ஒப்பந்ததாரர் பதிவினை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க தவறியவர்களை ஒப்பந்ததாரர் பட்டியலிருந்து நீக்கம் செய்யப்படுவார்கள்.
10. ஒப்பந்ததாரர்கள் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு எவ்வித ஒப்பந்தப்புள்ளி அழைப்புகளிலும் கலந்து கொள்ளாத பட்சத்தில் ஒப்பந்ததாரர்களின் பதிவுகள் இரத்து செய்யப்படும்.

ஒம்/-B.V. பாபு / 12.04.2022

கண்காணிப்பு பொறியாளர்

சிறப்பு திட்டங்கள் / பாலங்கள்